**கவனிக்க.-** *2018.02.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2060 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23

*2060 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 36 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 38 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின் குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) டீ. பீ. எஸ். குமார ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1986.05.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 14662 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான இஹல கொமுகொமுவ எனும் முகவரியில் வசிக்கும் திசாநாயக முதியன்சேலாகே பியசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு குளியாபிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் kuli/h/1/87 கீழ் 1986.10.21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.04.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருணாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கடுகம்பல பற்றில் உதுரு யடிகஹ கோறளையிலுள்ள 1395 – இஹல கொமுகொமுவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இஹல கொமுகொமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இலக்கம் 05 வெளிக்களத் தாளில் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் எப். வி. பி. 2210 163. ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.374 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு : காணியின் பெயர் : துன்கொலகெலே

வடக்கு : துண்டு இலக்கம் 119 உம் பிரவேசிக்கும் வழியும் ;
கிழக்கு : துண்டு இலக்கம் 164;
தெற்கு : துண்டு இலக்கம் 159 பாதுகாக்கப்பட்ட;
மேற்கு : துண்டு இலக்கம் 162.

டீ. பீ. எஸ். குமார,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர - மேற்கு.

2017, நவெம்பர் 27.

2 - 836/1

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின் குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் பி. டி. ஆர். டி. தர்மவர்தன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1986.05.14 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 14069 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கொன்னவ அனுக்கனே எனும் முகவரியில் வசிக்கும் பதிராஜ முதியன்சேலாகே சரனேலிஸ் அப்புஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருணாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் டி66/3207/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.10.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.04.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுந்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருணாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர கிழக்கு பிரதேசச் செயலாளர் பிரிவின் திஸ்ஸவ கோறளையிலுள்ள 377 – வெட்டஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கொன்னவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் அத்தியட்சகர் குருணாகல் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால்

தயாரிக்கப்பட்டு 11 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 2417 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 314 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.412 ஹெக்டெயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு : அம்பகஹலன்த மூகலான

வடக்கு : காணித்துண்டு 313;
கிழக்கு : காணித்துண்டு 315 மற்றும் பிரவேசிக்கும் வழி;
தெற்கு : காணித்துண்டு 339;
மேற்கு : காணித்துண்டு 311.

பி. டி. ஆர். டி. தர்மவர்தன,
பிரதேச செயலாளர்,
பண்டுவஸ்நுவர - மேற்கு.

2017, திசெம்பர் 22.

2 - 836/2

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொபேகனே பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் என். ஏ. ஏ. எஸ். ப்ரியங்கர ஆகிய நான், காணி அபவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2000.02.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ பிர 136872 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தித்தெனிய, பொரலூவெவ எனும் முகவரியில் வசிக்கும் மெனிகா துரயலாகே அசங்க குமார என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருணாகல் (தற்போது நிக்கவெரட்டிய) மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கேயூ/கேஒ/ 10/200 ஆம் இலக்கத்தின் கீழ் 2003.10.20 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.04.02 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுந்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருணாகல் நிர்வாக மாவட்டத்தின் கொபேகனே பிரதேச செயலாளர் பிரிவின் தேவமெதி ஹத் பற்றில் 1322 - அச்செத்தும கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தித்தெனிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 1 ஏக்கர் 02றூட். 0பேர்ச்சஸ். விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு :

வடக்கு : ஜே. எம். டிங்கிரி பண்டாவினது காணி;
கிழக்கு : பாதுகாக்கப்பட்ட தேக்கு பயிர்நிலம்;
தெற்கு : ஒற்றையடிப் பாதை;
மேற்கு : எச். எம். டிங்கிரி பண்டாவினது காணி.

என். ஏ. ஏ. எஸ். ப்ரியங்கர,
பிரதேச செயலாளர்,
கொபேகனே.

2017, நவெம்பர் 27.

2 - 836/3

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள மாவதகம பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் எம். எம். ஏ. பி. மஹவத்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1984.08.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ ப்ர/ 08634 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான மாஸ்வெவவத்த, மாவதகம எனும் முகவரியில் வசிக்கும் குருகுதே கதெர ஜினோரிஸ் என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருணாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் A/19/2585/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.08.20 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.03.26 ஆந் திகதிக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருணாகல் மாவட்டத்தின் மாவதகம பிரதேச செயலாளர் பிரிவின் வேஉடவில்லி ஹத்பத்துவே கோறளையிலுள்ள 191 பிலஸ்ஸ எனக் குறிப்பிட்டிருப்பினும் தற்போது 694 பிலஸ்ஸ பஹலகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹேனேபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 48/21/1 ஆம் இலக்க வெளிக்கள தாளில் கு/.1184 ஆம் துண்டு இலக்க பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்ட 68 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.160 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ளதுமான அரச காணித் துண்டு :

வடக்கு : துண்டு இலக்கம் 64;
கிழக்கு : துண்டு இலக்கம் 64;
தெற்கு : துண்டு இலக்கம் 67;
மேற்கு : துண்டு இலக்கம் 79.

எம். எம். ஏ. பி. மஹவத்த,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

2 - 837/1

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் - (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேல் மாகாண சபையின் குருணாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஈ. எம். எஸ். பீ. ரக்கநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 வது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982.10.20 ஆந்திகதி வழங்கப்பட்டுள்ள குரு/பிர/02031 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான உகுமிய, சந்தகல எனும் முகவரியில் வசிக்கும் ரத்னாயக்க முதியன்சேலாகே சயனேரிஸ் அப்புஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருணாகல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் F15/507/85 இன் கீழ் 1985.06.21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமை யாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளராக ஒருவர் இல்லாமை அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தாலும் அவர் பின்னுரிமையா ளராக இருக்க விரும்பாமை காரணமாக பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.03.26 ஆந்திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டடத்தில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில் தம்பதெனிய ஹத்பத்துவில் ரகோபத்து கோரளையில் 846 ஸதகல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கொஹொனயும் தமனுகல எனும் பெயருடைய கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு இலக்கம் பீ.பீ.ஏ. 1201/கே 379 எனும் வரைபடத்தில் 155 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 02 ஏக்கர் 03 றூட் 07 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கொஹொன ஸதகல குடியிருப்பு எனும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:-

வடக்கு : துண்டு இலக்கம் 156 உம் 161 உம் ;
கிழக்கு : துண்டு இலக்கம் 173;
தெற்கு : துண்டு இலக்கம் 173;
மேற்கு : துண்டு இலக்கம் 151.

ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
வீரம்புகெதர.

2017, செத்தெம்பர் 26.

2 - 837/2

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/53385.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- SPLC/ DEV / 04/ELPI/ 399.

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 26 சி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பிட்டுவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்விவி 591 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1357 எனக் காட்டப்பட்டுள்ள தும் 0.0253 ஹெக்டயர் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை சமிதி அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் பிட்டுவல வடக்கு சமாதி குதியோர் சமிதியின் நம்பிக்கைப் பொறுப்பாளர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத் தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1355 மற்றும் 1356 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1356;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1356 மற்றும் 1358;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1358 மற்றும் 1355.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2017.11.22 தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டிற்கமைய 2017 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சமிதி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2017.11.22 ஆம் தினத்திலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணியை வேறு கீழ்க்குத்தகை குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும், அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 23.

2-718

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/33637.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- இகோ/12கா/எல்/தீப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 26 பி இஹலதலாவ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த குருந்துகஹ ஹதகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்விவி 582 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1240 எனக் காட்டப்பட்டுள்ளதும் 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் வருஷ விதான ஹேமபால த சில்வா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : எப்விவி 582 இல் காணித்துண்டு இலக்கம் 1239 ;
கிழக்கு : எப்விவி 582 இல் காணித்துண்டு இலக்கம் 1240 இன் ஒரு பகுதி ;
தெற்கு : எப்விவி 582 இல் காணித்துண்டு இலக்கம் 1240 இன் ஒரு பகுதி ;
மேற்கு : எப்விவி 582 இல் காணித்துண்டு இலக்கம் 1238 ;

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) (1995.06.15 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை**.- பிராதன மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான

அபிவிருந்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம் - காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெருமதியின் 12% தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.09.25 ஆந் தினத்திலிருந்து 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணியை குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் வேறு கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. இதற்கான அளிப்புப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான தகுதி 2017.09.25 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்களின் பின்னரே கிடைக்கப்பெறும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும், அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட்ட வேண்டி இருப்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 23.

02 - 719

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/32572.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- இகோ/14/தீப/இம/03.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம் இமதுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பனுகொல்கொட கிராம அலுவலர் பிரவைச் சேர்ந்த பனுகொல்கொட 2 ஆம் கட்டம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபிகா 2484 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 83 எனக் காட்டப்பட்டுள்ளதும் 20 பேர்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் ஹேமலதா மொஹொட்டி ஆராச்சி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 82 மற்றும் 84 ;
கிழக்கு : பிரதான பாதை மற்றும் காணித்துண்டு இலக்கம் 84 இற்கு செல்லும் பாதை;
தெற்கு : பிரதான பாதை
மேற்கு : பிரவேசிக்கும் வழி

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) (1995.06.15 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.**- பிராதன மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான

அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தண்டப்பணம் - காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெருமதியின் 12% தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.09.25 ஆந் தினத்திலிருந்து 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணியை குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் வேறு கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாறறம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. இதற்கான அளிப்புப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான தகுதி 2017.09.25 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்களின் பின்னரே கிடைக்கப்பெறும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும், அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட்ட வேண்டி இருப்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, பெப்புருவரி 23.

2 - 720

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/41010.
பிரதிக் காணி ஆணையாளரின்
இல.:- என்சிபி/பிஎல்சி/எல்/6/15/04.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அனுராதபுரம் மாவட்டம் நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 282 பகலகம கிராம அலுவலர் பிரவைச் சேர்ந்த சமகிபுர எனும் கிராமத்தில் - சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 5.5475 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தறுமாறு கேட்டுத் திரு. பிண்புர டேவாகே மகிந்த வீரசிங்க விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : வீதிக்கான ஒதுக்கு மற்றும் சந்திரதாசவுக்கான காணி;
கிழக்கு : அரச காணி மற்றும் குலதுங்கவின் காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அரச காணி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.01.09 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.**- 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த

வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப்பெறுமதியில் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2018 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூ. 5,000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும், திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்த குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

*தவணைப்பணம்* - அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.01.09 ஆந் தினத்திலிருந்து குனறந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர் (காணி),
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 23.

2 - 793

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/35122 (1).
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- இகோ/14/தீப/மாலி/01.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம் மாலிம்பட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 355 ஏ எல்கிரிய கிராம அலுவலர் பிரவைச் சேர்ந்த எல்கிரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பிபிமார 2125 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0772 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் பாடிகமகே சந்திராவதி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 மற்றும் பிபிமார 160/13 ;
கிழக்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 02 ;
தெற்கு : இந்த வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 02 மற்றும் பிபிமார 13110/2;
மேற்கு : பிபிமார 1686/23 மற்றும் பிபிமார 160/4.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) (1995.06.15 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை**.- பிராதன மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்திற்கான அபிவிருந்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

**தண்டப்பணம்** - காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெருமதியின் 12% தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.03.15 ஆந் தினத்திலிருந்து 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணியை குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் வேறு கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாறறம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட் மாட்டாது. இதற்கான அளிப்புப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான தகுதி 2017.03.15 ஆந் திகதி தொடக்கம் 05 வருடங்களின் பின்னரே கிடைக்கப்பெறும்;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காககொடுபடல் வேண்டும், அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டி இருப்பதுடன் அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, பெப்புருவரி 23.

2 - 794

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.